[1974 மார்ச் 22

குடியாத்தம் பகுதியில் காலரா.

*556 வினு—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆம் ஆண்டு ஜூலை—ஆகஸ்டு மாதங்களில் குடியாத்தம் பகுதியில் காலரா நோய் பரவியதா?

(இ) ஆம் எனில், அதைக் கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) காலரா நோயால் வாடுவோர் என சந்தேகிக்கப்பட்டவர்களும், குடற்காய்ச்சல் நோயால் வாடியவர்களும் குடியாத்தம் அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப் பட்டனர்.

தடுப்பு நடவடிக்கைகளுக்காக நகராட்சியால் சிறப்புப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டனர். அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையைச் சேர்ந்த நல்வாழ்வு பணியாளர்கள் யாவரும் தடுப்பு நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டனர்.

நீரில் குளோரின் மருந்து கலக்கப்பட்டது. காலரா நோயுற்றவர்களுடன் இருந்தவர்களுக்கு காலராத் தடுப்பு ஊசிகள் குத்தப்பட்டன.

நலத்துறை இணை இயக்குநரும், உதவி இயக்குநரும் நோயுற்ற மக்கள் வசித்த பகுதிகளைப் பார்வையிட்டு காலராத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டனர்.

விரைந்தும் முழுமூச்சுடனும் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளின் பலனாக காலரா நோய் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுக்காலமாக இல்லாமல் கடந்த ஆண்டும் அதற்கு

1974 மார்ச் 22] [திரு. வை. பாலசுந்தரம்]

முன் ஆண்டும்தான் தமிழ்நாட்டிலே ஒரு சில சமயங்களிலே காலரா நோய் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது. அந்த நோயை அடியோடு கட்டுப்படுத்துவதற்குத் தனித் திட்டம் ஏதாவது கொண்டுவர அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, காலரா நோயைத் தடுப்பது என்பது நேரடியாக ஒரு தொத்துநோயைத் தடுக்கிற முயற்சியாக அமைவதல்ல. எல்லா மக்களுக்கும் பாது காக்கப்பட்ட குடிநீர் கிடைக்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் மெல்ல மெல்லப் பூர்த்தியடைகின்ற கட்டத்திலே அதைத் தடுக்க முயல்வது எளிதாகும். காலரா தலை காட்டாமல் இருப்பதற்காக எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தலை காட்டிவிட்டால் அதைப் போக்குவதற்காக ஆயிரக்கணக்கான ஊசிகள் போடப்பட்டு அந்த வட்டாரம் பாதுகாக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று சங்கிலிபோன்று தொடர்புடையவை ஆகும்.

குடிநீர் வழங்கு திட்டங்கள்.

* 557. **வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லித் துறை குடிநீர்த் திட்டம் இந்தாண்டு தொடங்க அரசாங்க பட்ஜெட்டில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்த நெல்லித் துறைத் திட்டத்தின் மூலமாக—சிங்காநல்லூர் முனிசிபாலிடி, பல்லடம், சூலூர், சோமனூர் போன்ற இடங்களிலே தண்ணீர் கிடைக்காத காரணத்தினாலே—அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று பல வருடங்களாக வற்புறுத்தப்பட்டு அதை ஏற்றுக்கொண்ட அரசாங்கம் எதன் காரணமாக தாமதிக்கிறது, நிதியில்லையா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?